செய்தி வெளியீடு எண். 513 /2010 நாள்: 15.7.2010

**வேலூர் மாவட்ட உள்ளாட்சி தேர்தலில் 26 பேர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அறிவிப்பு.**

வேலூர் மாவட்டத்தில் காலியாக உள்ள ஒரு மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஒரு ஒன்றிய குழு உறுப்பினர் 5 நகராட்சி உறுப்பினர், ஒரு பேரூராட்சி உறுப்பினர், 4 ஊராட்சி தலைவர்கள், 37 ஊராட்சி உறுப்பினர்கள் என மொத்தம் 48 உள்ளாட்சி பதவிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 10-ம் தேதியுடன் முடிவடைந்தது, வேட்பு மனுக்களை வாபஸ் பெற 14.7.2010 அன்று கடைசி நாளாகும். இதில் 26 பேர் மனுக்களை வாபஸ் பெற்றுக் கொண்டனர். தேர்தல் அறிவிக்கப்பட்டதில் மேல்விஷாரம் மூன்றாம் நிலை நகராட்சியில் 3 வார்டுகளுக்கு யாரும் மனுதாக்கல் செய்யவில்லை. இது தவிர 37 ஊராட்சி உறுப்பினர் பதவிகளில் பழங்குடியினர் பதவிகளில் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்த 8 வார்டுகளிலும், செய்யாத்துவண்ணம் ஊராட்சி தலைவர் பதவிக்கும், பழங்குடியினர் இல்லாததால் யாருமே வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை.

வாலாஜா ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பதவிக்கு திரு.சக்திவேல் குமார் (காங்கிரஸ்) மட்டுமே மனுதாக்கல் செய்திருந்தால் அவர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே போல ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினராக திரு.சத்திஷ் (திமுக) தப்பூர் ஊராட்சி தலைவராக திரு.வடிவேல், கலவை புத்தூர் ஊராட்சி தலைவராக திருமுதி.ஷியாமளா ஆகியோரும் ஊராட்சி உறுப்பினர்கள் பதவிக்கு 22 பேரும் மொத்தம் 26 நபர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இது தவிர குடியாத்தம் நகராட்சி உறுப்பினர் 1 பதவிக்கு 3 பேரும், பென்னாத்தூர் பேரூராட்சி 1 உறுப்பினர் பதவிக்கு 3 பேரும், அம்பலூர் ஊராட்சி தலைவர் பதவிக்கு 3 பேரும், 7 ஊராட்சி உறுப்பினர் பதவிக்கு 18 பேரும் மொத்தம் 10 பதவிகளுக்கு 27 நபர்கள் போட்டியிடுகின்றனர்.

வருகின்ற 22-ந் தேதி வாக்குபதிவும், 24-ம் தேதி வாக்குகள் எண்ணிக்கையும் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9.